# நீதிமொழிகள் (சகோ.ஜோஸ்)

**முன்னுரை:**

வேதாகமத்தில் பொதுவாக எல்லாராலும், வாசிக்கப்படும் புத்தகமாக நீதிமொழிகள் இருக்கிறது; கிறிஸ்தவராக நம்முடைய தேவபக்தியான வாழ்க்கைக்கு சங்கீதம் உதவுவதுப்போல, நடைமுறை வாழ்க்கைக்கு நீதிமொழிகள் உதவுகிறது; பழைய ஏற்பாட்டின் பாடல் (இலக்கிய) புத்தகம் என்ற பிரிவில் நீதிமொழிகள் புத்தகம் இருக்கிறது

நீதிமொழிகள் புத்தகத்தின் ஆசிரியராக சாலொமோன் இருக்கிறார் ( நீதி 1:1; பிர12:9), என்றாலும் அவர் மட்டுமே ஆசிரியராக இல்லை. சாலொமோன் தேவனால் ஞானியாக மாறினான் ( 1 இராஜா 4:29), சாலொமோனின் ஞானமானது அவனை மற்றெல்லா மனிதர்களை விட சிறந்தவனாக மாற்றியது ( 1 இராஜா 4:30-34), ஆனால் இந்த ஞானமானது சாலொமோனுக்கு தேவனால் கொடுக்கப்பட்டது ( 1 இராஜா 3:7-13), தேவன் கொடுத்த ஞானத்தினால் சாலொமோன் மூவாயிரம் நீதிமொழிகளை சொன்னான் ( 1இராஜா 4:32), அவைகளில் நமக்கு இந்த நீதிமொழிகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. சாலொமோன் இந்த பூமியில் உள்ளவர்களை பார்க்கிலும் ஞானவாக இருந்திருக்கலாம் ( 1 இராஜா 3:12), ஆனால் சாலொமோன் பார்க்கிலும் பெரியவர் கிறிஸ்தவர்களாகிய நமக்கு இருக்கிறார், அவர் தான் நம்முடைய எஜமானாகிய இயேசு கிறிஸ்து (மத் 12:42).

**நீதிமொழிகள் புத்தகத்தின் ஆசிரியர்கள்:**

1. நீதிமொழிகள் (1 – 9) – சாலொமோனின் நீதிமொழிகள்
2. நீதிமொழிகள் (10-22:16) – சாலொமோனின் நீதிமொழிகள்
3. நீதிமொழிகள் (22:17-24:34) – ஞானவானின் வார்த்தைகள் ; பெயர் தெரியாத ஆசிரியராக இருக்கலாம், ஒருவேளை சாலொமோனாக இருக்கலாம். (பிர12:9)
4. நீதிமொழிகள் (25:1-29:37) – எசேக்கியாவின் மனுஷர் பேர்தெழுதின சாலொமோனின் நீதிமொழிகள்.
5. நீதிமொழிகள் (30) – யாக்கேயின் குமாரன் ஆகூர் என்னும் மனிதனின் நீதிமொழிகள்
6. நீதிமொழிகள் (31) – லேமுவேலின் நீதிமொழிகள்

**மைய கருத்து மற்றும் நோக்கம் :**

நீதிமொழிகளின் புத்தகத்தின் நோக்கமாக ஞானத்தை பெற்றுக்கொள்வது இருக்கிறது **“இவைகளால் ஞானத்தையும் போதகத்தையும் அறிந்து, புத்திமதிகளை உணர்ந்து, விவேகம், நீதி, நியாயம், நிதானம் என்பவைகளைப்பற்றிய உபதேசத்தை அடையலாம். இவைகள் பேதைகளுக்கு வினாவையும், வாலிபருக்கு அறிவையும்; விவேகத்தையும் கொடுக்கும். புத்திமான் இவைகளைக் கேட்டு, அறிவில் தேறுவான் விவேகி நல்லாலோசனைகளை அடைந்து; நீதிமொழியையும், அதின் அர்த்தத்தையும், ஞானிகளின் வாக்கியங்களையும், அவர்கள் உரைத்த புதைபொருள்களையும் அறிந்துகொள்வான்”. (**நீதி 1:2-6)

நீதிமொழிகள் புத்தகமானது ஞானத்தையும், அறிவையும், புத்தியையும் பெற்றுக்கொள்ள வேண்டியத்தின் அவசியத்தை நமக்கு போதிக்கிறது (நீதி 2:3-7) என்றாலும்; கர்த்தருக்கு பயப்படுவது தான் ஞானமாக இருக்கிறது என்றும், கர்த்தருக்கு பயப்படுவதின் முக்கியத்துவத்தை நமக்கு கற்றுக்கொடுக்கிறது (நீதி 1:7; நீதி 3:7; நீதி 10:27; நீதி 9:10; நீதி 22:3; நீதி 8:12,13). கர்த்தரை நம்புவதன் முக்கியத்துவத்தையும் (நீதி 28:25; நீதி 20:22; நீதி 21:31); கர்த்தருக்கு பிரியமான வாழ்க்கை வாழ்வதற்கான ஞானத்தையும் (நீதி 3:7-11; நீதி 6:16-20; நீதி 10:29) நமக்கு போதிக்கிறது.

நீதிமொழிகள் புத்தகத்தில் அதிகமாக பேசப்படும் இரண்டு நபர்களாக ஞானவான்களும், பேதைகளுமாக (மூடர்கள்) இருக்கிறார். நீதிமான் மற்றும் துன்மார்க்கனை ஒப்பிட்டு நீதிமான்களின் ஆசிர்வாதத்தையும், துன்மார்க்கரின் சாபத்தையும் பற்றியும் நமக்கு கூறுகிறது (நீதி 10), நம்முடைய வாழ்க்கையின் அடிப்படை ஞானத்தை நமக்கு கற்று தருகிறது பார்க்கவும் (நீதி 22:29).

**புறக்குறிப்பு:**

I. சாலொமோனின் நீதிமொழிகள் ( 1அதி முதல் 9அதி வரை)

- **a. அதிகாரம் 1:**
  1. நீதிமொழிகளின் நோக்கம் ( 1:1-7)
  2. பாவிகள், பொருளாசையுள்ளவர்களின் வழிகள் (1:8-19)
  3. ஞானத்தின் அழைப்பு (ஞானம் கூப்பிடுகிறது) (1:20-33)
- **b. அதிகாரம் 2:**
  1. ஞானத்தை தேட வேண்டும். (2:1-9)
  2. ஞானம் நம்மை பாதுகாக்கிறது (2:10-22)
- **c. அதிகாரம் 3:**
  1. கிருபையும், சத்தியமும் (3:1-12)
  2. ஞானத்தின் மதிப்பு (3:13-22)
  3. ஞானத்தினால் கிடைக்கும் பலன்கள் (3:23-35)
- **d. அதிகாரம் 4:**
  1. ஞானத்தை சம்பாதித்தல் (4:1-10)
  2. ஞானம் நம்மை சரியான பாதையில் நடத்தும்; நீதிமான்களின் பாதை (நீதி 4:11-27)
- **e. அதிகாரம் 5:**
  1. விபச்சாரத்தை குறித்து எச்சரிக்கையாயிருத்தல் (5)
- **f. அதிகாரம் 6:**
  1. நம்மை பாதுகாக்கிறதற்கான புத்திமதி (6:1-15)
  2. தேவன் வெறுக்கிற ஏழு காரியங்கள் (6:16-19)
  3. விபாச்சாரத்தினால் வரும் விளைவுகள் (6:20-35)
- **g. அதிகாரம் 7:**
  1. விபச்சாரத்தினால் வரும் விளைவுகளை குறித்து உதாரணம்: (7:1-27)
- **h. அதிகாரம் 8,9:**
  1. ஞானத்தின் அழைப்பு (8:1-21)
  2. ஞானத்தின் ஆரம்ப காலம் (தொடக்கம்) (8:22-36)
  3. ஞானமும், மதியீனம் (9:1-18)

**II. சாலொமோனின் நீதிமொழிகள் பிரிவு இரண்டு ( 10 அதி முதல் 22 அதி வரை)**

- **a. அதிகாரம் 11-14 :**
  - a. நீதிமான்களுக்கு கிடைக்கும் நன்மைகள், ஆசிர்வாதங்கள் (நீதி 10)
  - b. நீதிமான்களுக்கும், துன்மார்க்கனுக்கு கிடைக்கும் பலன்கள் (நீதி 11,12)
  - c. நீதிமானுடைய வழி, துன்மார்க்கரின் வழி (13,14)
- **b. அதிகாரம் 15-22:**
  - a. நீதிமான்களின் வாயின் வார்த்தைகள், துன்மார்க்கரின் வாயின் வார்த்தைகள் (நீதி 15,16)
  - b. வீடும், உறவும் (நீதி 17)
  - c. மோசமான மற்றும் நல்ல மனப்பான்மை (நீதி 18-20)
  - d. நடத்தை (நீதி 21,22)

**III. ஞானவானின் வார்த்தைகள் (22:17 யிலிருந்து- 29 அதி வரை)**

- a. செய் மற்றும் செய்யாதே (22:17- 25:28)
- b. மூடன் மற்றும் சோம்பேறி (26:1-16)
- c. நடைமுறை வாழ்க்கைக்கான புத்திமதி (26:17 – 27அதி; 28 அதி)
- d. நேர்மை (நீதி 29)

**IV. ஆகூரின் நீதிமொழிகள் (30 அதி )**

**V. லேமுவேலுக்கடுத்த வசனங்கள் (31 அதி)**